FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(Under section 173 BNSS) (குற்ற.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)
(பா.சூ.பா.ச பிரிவு 173இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8101927

1. District : Virudhunagar PS: Vigilance and Anti Corruption Year: 2025 FIR No.08/2025 Date: 14.10.2025
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: PC Act 1988 as Amended in 2018 Sections பிரிவுகள்: u/s 7

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 13.10.2025 Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : 18.30 hrs Time to : 23.00 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 14.10.2025 Time : 09.30 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 14.10.2025 Time : 09.30 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் விருதுநகர் தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் அலுவலர்கள் குடியிருப்பு வளாகத்திற்குள் உள்ள "D" Block குடியிருப்பு கட்டிடத்திற்கு முன்பகுதி மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையம், மதுரை ரோடு, விருதுநகர் சுமார் 4 கி.மீ வடக்கு

Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திரு.M.முத்துமாரி (b) Father's/ Husband's Name : திரு.முத்துராமலிங்கம்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 16.05.1975 (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தனிவட்டாட்சியர்/ மாவட்ட துணை ஆய்வு குழு அலுவலர் (g) Address : தனிவட்டாட்சியர் (சிப்காட்), அகத்தாகுளம் அலகு-4 (இ) அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம்
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைத்தல்)

1) திரு.அரிசந்திரன், 35/2025, த/பெ.சக்கண்ணன், தீயணைப்பாளர் 10318, தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையம், மதுரை ரோடு, விருதுநகர்.
2)திரு.நவநீத கிருஷ்ணன், 32/2025, த/பெ.துரைப்பாண்டி, தீயணைப்போர் ஓட்டுநர் 9777, தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையம், மதுரை ரோடு, விருதுநகர்.
3) திரு.வினோத், 36/2025, த/பெ.பஞ்சவர்ணம், தீயணைப்பாளர் 8767, தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையம், மதுரை ரோடு, விருதுநகர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

-இல்லை-

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு Not arise

11. Inquest Report / Un-natural death Case No. if any;
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் Not arise

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)
பணிந்து அனுப்பப்படுகிறது.

நான் (கு.ராமச்சந்திரன், கூடுதல் காவல் கண்காணிப்பாளர்) இன்று 14.10.2025 காலை 09.30 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, விருதுநகர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.முத்துமாரி அவர்கள் நிலையத்தில் ஆஜராகி ஒரு புகார் மனுவையும் அத்துடன் திடீர் இணை ஆய்வு செயல்முறைகள், எதிரிகளின் வாக்குமூலம், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.59,500/-, மாமூலாக வசூல் செய்த லஞ்ச பணத்தில் ரூ.3,79,000/- பணத்தை வங்கியில் டெபாசிட் செய்ததற்குரிய செலான், மேற்படி பணம் மற்றும் செலான் இருந்த THANGAMAYIL DIGI GOLD என்று அச்சிடப்பட்டு அடையாளமுள்ள மஞ்சள் நிற பை ஆகியவற்றையும் சேர்த்து 1) திரு.அரிச்சந்திரன், 35/2025, த/பெ.சக்கண்ணன், தீயணைப்பாளர் 10318, தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையம், மதுரை ரோடு, விருதுநகர் 2) திரு.நவநீத கிருஷ்ணன், 32/2025, த/பெ.துரைப்பாண்டி, தீயணைப்போர் ஒட்டுநர் 9777, தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையம், மதுரை ரோடு, விருதுநகர் மற்றும் 3) திரு.வினோத், 36/2025, த/பெ.பஞ்சவர்ணம், தீயணைப்பாளர் 8767, தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையம், மதுரை ரோடு, விருதுநகர் ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி கொடுத்தார். அந்த புகார் மனு பின்வருமாறு: அனுப்புனர் திரு.எம்.முத்துமாரி, (50/2025),

/தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
(K. RAMACHANDRAN)
Name: பெயர் ADSP/VPAC/VNR(00)
Rank: நிலை .....No. எண் .....

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
14.10.25 at 1500 hrs.

விருதுநகர் ஊ.த.க.பிரிவு குற்ற எண்.08/2025 பிரிவு 7 of PC Act 1988 as Amended in 2018 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி

த/பெ.முத்துராமலிங்கம், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், விருதுநகர் மாவட்டம், தனி வட்டாட்சியர் (சிப்காட்),அகத்தாகுளம் - அலகு-4, (இ) அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம் பெறுநர் கூடுதல் காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர் (அ.ப). அய்யா, பொருள் :- விருதுநகர் மாவட்டம் - தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை - விருதுநகர் தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையத்தில் பணிபுரியும் தீயணைப்பாளர் மற்றும் தீயணைப்போர் ஓட்டுநர் பயன்படுத்திய இருசக்கர வாகனம் - திடீர் இணை ஆய்வு - லஞ்ச பணம் எனக்கருதி கைப்பற்றியது - நடவடிக்கை எடுக்க வேண்டுவது - தொடர்பாக. நான் தற்போது விருதுநகர் மாவட்டம், அகத்தாகுளம்-அலகு-4, (இ) அருப்புக்கோட்டை, தனிவட்டாட்சியராக (சிப்காட்) 30.09.2024 அன்று முதல் பணிபுரிந்து வருகிறேன். மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின்பேரில் கடந்த 01.10.2025ஆம் தேதி முதல் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகவும் இருந்து வருகிறேன். நேற்று (13.10.2025) மாலை சுமார் 17.00 மணியளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பணியிலிருந்தபோது, விருதுநகர் தீயணைப்பு மற்றும் மீட்புபணிகள் அலுவலகத்தில் தீயணைப்பாளர்களாக பணிபுரிந்துவரும் திரு.அரிச்சந்திரன், திரு.வினோத் மற்றும் தீயணைப்போர் ஓட்டுநராக பணிபுரிந்துவரும் திரு.நவநீத கிருஷ்ணன் ஆகியோர்கள் விருதுநகர் தீயணைப்பு மற்றும் மீட்புபணிகள் அலுவலகத்திற்குட்பட்ட பகுதிகளிலுள்ள பட்டாசு கடைகள், பட்டாசு தயார் செய்யும் கம்பெனிகள் மற்றும் பெரிய தொழிற்சாலைகளுக்கு TN 93 1118 Pulsar மற்றும் TN 07 CB 2090 Pulsar ஆகிய இருசக்கர வாகனங்களில் சென்று சம்மந்தப்பட்ட உரிமையாளர்களை சந்தித்து, வருகிற தீபாவளி திருநாளை (20.10.2025) முன்னிட்டு தனியாக நோட்புக் போட்டு குறிப்பு எழுதி கொண்டு (யார் யார் எவ்வளவு பணம் என்பதை) மாமூல் பணம் வசூல் செய்வதாகவும், அவ்வாறு வசூல் செய்த பணத்துடனும், குறிப்பு எழுதிய நோட்டுடனும் அவர்கள் குடியிருக்கும் மேற்படி அரசு குடியிருப்பு பகுதி நுழைவுவாயில் வழியாக மாலை சுமார் 18.00 மணிக்கு மேல் மேற்படி இருசக்கர வாகனங்களுடன் செல்வதாகவும் கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையிலும் மற்றும் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களின் வேண்டுகோளின்பேரில் நான் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு மாலை சுமார் 17.30 மணிக்கு வந்து விபரத்தை கேட்டு தெரிந்து கொண்டு, விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.கு.ராமச்சந்திரன் மற்றும் அவர்களது குழுவினருடன் நேற்று (13.10.2025) மாலை சுமார் 17.40 மணிக்கு விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தை விட்டு புறப்பட்டு மாலை சுமார் 18.00 மணிக்கு விருதுநகர் டவுனுக்குள் இருந்து, விருதுநகர் மதுரை ரோட்டில் அமைந்துள்ள விருதுநகர் தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையத்திற்கு தெற்கு

பக்கம் வழியாக தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் அலுவலர்கள் குடியிருப்பு பகுதிக்குள் நுழையும் வாகனங்களை, மேற்படி குடியிருப்பு நுழைவுவாயிலில் வெளியே ஆங்காங்கே மறைவாக நின்று கண்காணித்து கொண்டிருந்தபோது, மாலை சுமார் 18.30 மணியளவில் விருதுநகர் டவுனுக்குள் இருந்து TN 93 1118 Pulsar என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தில் இரண்டு நபர்கள் அமர்ந்து கொண்டு மேற்படி குடியிருப்பு பகுதி நுழைவு வாயிலுக்குள் வந்ததை மேற்படி அதிகாரிகள் அடங்கிய குழுவினருடன் மறித்தபோது, நிற்காமல் உள்ளே சென்றதை பின்தொடர்ந்து சென்றபோது, மேற்படி இருசக்கர வாகனத்தை மேற்படி குடியிருப்பு வளாகத்திலுள்ள "D" Block குடியிருப்பு கட்டிடத்திற்கு முன்பகுதியில் நிறுத்திவிட்டு கீழே இறங்கி நின்றவர்களை விசாரித்தபோது அவர்கள் திரு.அரிச்சந்திரன், தீயணைப்பாளர் மற்றும் திரு.நவநீத கிருஷ்ணன், தீயணைப்போர் ஓட்டுநர் என்று சொன்னபோது அவர்களிடம் திடீர் இணை ஆய்வு செய்யவுள்ள விவரம் சொல்லி, ஏன் இருசக்கர வாகனத்தை நிறுத்தாமல் வந்தீர்கள் என்று கேட்டபோது, எங்களது இருசக்கர வாகனத்தை தாங்கள் மறித்ததை நாங்கள் கவனிக்கவில்லை என்று கூறினர். பின்னர் திரு.அரிச்சந்திரனை சோதனை செய்ய, அவரது இடதுபக்க பேண்ட் சைடுபாக்கெட்டில் கத்தை கத்தையாக பணம் இருந்தது. அவற்றை எடுத்து எண்ணிப்பார்க்க, அதில் 500 ரூபாய் நோட்டுக்கள் 26 எண்ணங்கள் என மொத்தம் ரூ.13,000/-, 100 ரூபாய் நோட்டுக்கள் 2 எண்ணம் மொத்தம் ரூ.200/- மற்றும் 10 ரூபாய் நோட்டு 1 எண்ணம் ரூ.10/- ஆக மொத்தம் ரூ.13,210/- பணம் இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் கேட்க, அதற்கு அவர் மேற்படி ரூ.13,210/- பணத்தில் ரூ.210/- மட்டும் தனது சொந்த பணம் என்றும், மீதமுள்ள ரூ.13,000/- பணமானது விருதுநகர் தீயணைப்பு மற்றும் மீட்புபணிகள் அலுவலகத்திற்குட்பட்ட பகுதிகளிலுள்ள பட்டாசு கடைகள், பட்டாசு தயார் செய்யும் கம்பெனிகள் மற்றும் பெரிய தொழிற்சாலைகளின் உரிமையாளர்களிடமிருந்து தீபாவளிக்காக வசூல் செய்து வைத்துள்ள பணம் என்றும் கூறினார். ஆகையால் அவரது சொந்த பணம் என்று கூறிய ரூ.210/- அவரிடமே ஒப்படைத்துவிட்டு, ரூ.13,000/- பணம் லஞ்சமாக பெற்ற பணமாக இருக்கலாம் என கருதி அந்த பணம் ரூ.13,000/- மட்டும் கைப்பற்றப்பட்டது. தொடர்ந்து இவற்றை கேட்டும் கவனித்து கொண்டிருந்த திரு.நவநீத கிருஷ்ணனை சோதனை செய்ய, அவரது சட்டை பாக்கெட்டில் ரூ.200/- பணம் மட்டும் இருந்தது. அந்த பணம் பற்றி அவரிடம் கேட்க, அதற்கு அவர் தனது சொந்த பணம் என்று தெரிவித்ததால், அந்த ரூ.200/- பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் மேற்படி TN 93 1118 Pulsar என்கிற இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த திரு.அரிச்சந்திரனிடம் மேற்படி இருசக்கர வாகனத்தை பற்றி கேட்க, மேற்படி இருசக்கர வாகனமானது தனது நண்பர் திரு.பிரகாஷ் குமார் என்பவருடையது என்றும், தான்தான் மேற்படி வாகனத்தை கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக பயன்படுத்தி வருவதாகவும் கூறினார். பின்னர் மேற்படி இருசக்கர வாகனத்தை சோதனை செய்ய, அந்த வாகனத்தின் டேங்க்கவரில் இரண்டு நோட்டுக்கள் இருந்தது. அந்த இரண்டு நோட்டுக்களை பற்றி மேற்படி திரு.அரிச்சந்திரனிடம்

கேட்க, Classmate என்று அச்சிடப்பட்டு அடையாளமுள்ள நோட்டை காண்பித்து, மேற்படி நோட்டில் யார் யாரிடமிருந்து எந்தெந்த தேதிகளில் எவ்வளவு பணம் வசூல் செய்யப்பட்டது என்ற விபரத்தினை திரு.நவநீத கிருஷ்ணனும், திரு.வினோத்தும் கைப்பட குறிப்பு எழுதி வைத்துள்ளதாகவும், Schoolmate என்று அச்சிடப்பட்டு அடையாளமுள்ள மற்றொரு நோட்டை காண்பித்து, மேற்படி நோட்டில் பணம் வசூல் செய்யக்கூடிய நபர்களின் தொலைபேசி எண்களை தான் தன் கைப்பட எழுதி வைத்துள்ளதாகவும் கூறினார். ஆகையால் மேற்படி Classmate என்று அச்சிடப்பட்டு அடையாளமுள்ள நோட்டு மற்றும் Schoolmate என்று அச்சிடப்பட்டு அடையாளமுள்ள நோட்டு ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் மேற்படி Classmate என்று அச்சிடப்பட்டு அடையாளமுள்ள நோட்டில் யார் யாரிடமிருந்து எந்தெந்த தேதிகளில் எவ்வளவு பணம் வசூல் செய்யப்பட்டது என்ற விபரங்கள் அடங்கியவற்றின் கூட்டுத்தொகையை கூட்டி, அந்த பணம் பற்றி அவர்களிடம் கேட்க, அதற்கு திரு.நவநீத கிருஷ்ணன் மேற்படி வசூலான பணத்தில் சனிக்கிழமை வரை வசூலான மொத்தம் ரூ.4,25,500/- பணத்தை, உடன் தீயணைப்பாளராக பணிபுரியும் திரு.வினோத்திடம் கொடுத்துள்ளதாகவும், மேற்படி திரு.வினோத் அருகிலுள்ள "C" Block-ல் C3-ல் குடியிருப்பதாகவும், தற்போதும் C3-ல்தான் இருப்பதாகவும் கூறி, "C" Block கட்டிட குடியிருப்பிற்கு அழைத்து சென்று கீழே இருந்தவாறு, மேற்படி திரு.வினோத்தை அழைத்தார். அவரும் கீழே வந்தவுடன், அவரிடம் மேற்படி திரு.அரிச்சந்திரன் மற்றும் திரு.நவநீத கிருஷ்ணன் ஆகியோர் தீபாவளி மாமூல் பணமாக வசூல் செய்து கொடுத்த ரூ.4,25,500/- பணத்தை பற்றி கேட்க, அதற்கு அவர் மேற்படி ரூ.4,25,500/- பணத்தில் ரூ.3,79,000/- பணத்தை தனது பெயரில் விருதுநகர் கனரா வங்கி கிளையிலுள்ள சேமிப்பு கணக்கில் (கணக்கு எண்.62762259492) 13.10.2025 அன்று டெபாசிட் செய்ததாகவும், அவ்வாறு டெபாசிட் செய்த செலான் மற்றும் மீதிபணம் ரூ.46,500/- ஆகியவற்றை ஒரு மஞ்சள் பையில் வீட்டினுள் வைத்திருப்பதாகவும் கூறி, அந்த THANGAMAYIL DIGI GOLD என்று அச்சிடப்பட்டு அடையாளமுள்ள மஞ்சள்நிற பையை எடுத்து வந்து ஆஜர் செய்தார். அந்த மஞ்சள்நிற பையை திறந்து அதனுள் பார்க்க, அதில் கத்தையாக பணமும், டெபாசிட் செய்த ஒரு செலானும் இருந்தது. அந்த கத்தையாக இருந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்க, அதில் 500 ரூபாய் நோட்டுக்கள் 83 எண்ணங்கள் மொத்தம் ரூ.41,500/-, 200 ரூபாய் நோட்டுக்கள் 14 எண்ணங்கள் மொத்தம் ரூ.2,800/-, 100 ரூபாய் நோட்டுக்கள் 22 எண்ணங்கள் மொத்தம் ரூ.2,200/- ஆக மொத்தம் ரூ.46,500/- பணம் இருந்தது. மேற்படி ரூ.46,500/- பணமானது லஞ்சப்பணமாக இருக்கலாம் என கருதி அப்பணம் ரூ.46,500/- கைப்பற்றப்பட்டது. மாமூலாக வசூல் செய்த லஞ்சப்பணத்தை டெபாசிட் செய்ததற்குரிய செலானும், மேற்படி பணம் மற்றும் செலான் இருந்த THANGAMAYIL DIGI GOLD என்று அச்சிடப்பட்டு அடையாளமுள்ள மஞ்சள்நிற பையும் கைப்பற்றப்பட்டது. பின்னர், அந்த இடம் சோதனை நடவடிக்கைகள் தயார்

செய்வதற்கு ஏற்ற இடமாக இல்லாததால், அங்கிருந்து புறப்பட்டு, விருதுநகர் தீயணைப்பு மற்றும் மீட்புபணிகள் நிலையத்திற்கு இரவு சுமார் 19.30 மணிக்கு வரப்பட்டது. பின்னர் நிலையத்தில் பணியிலிருந்த திரு.சீ.காசி, முன்னணி தீயணைப்பு அலுவலர் 7243, திரு.சீ.முத்துகிருஷ்ணன், முன்னணி தீயணைப்பு அலுவலர் 6975 மற்றும் திரு.தினேஷ், தீயணைப்பாளர் 8793 ஆகிய நபர்களையும், அவர்களது இருக்கைகளையும் சோதனை செய்ய, அவர்களிடம் வேறு எந்தவிதமான பணமும் இல்லை. மேற்படி திரு.காசி, திரு.முத்துகிருஷ்ணன் ஆகியோரிடமிருந்து நிலைய நடப்பிலுள்ள பொதுநாட்குறிப்பு பெற்று பார்வையிடப்பட்டது. அதில் திரு.அரிச்சந்திரனுக்கு 13.10.2025 இரவுப்பணி என்றும், மாலை 17.00 மணி முதல் மறுநாள் 14.10.2025 காலை 08.30 மணி வரை எனவும், மாலை 17.00 மணிக்கு அவருக்கு பணிப்பொறுப்பு வழங்கப்பட்ட பிறகு, அவர் அவருக்கு ஒதுக்கப்பட்ட வாகனத்தில் பொறுப்பு எடுத்துக்கொள்வார் என்றும், அதன்பிறகு அவர் ஓய்வறை அல்லது நிலைய வளாகத்திற்குள் இருக்கலாம் என்றும், வளாகத்தைவிட்டு வெளியில் சென்றால் அவர்தான் பொறுப்பு என்றும், அதேபோல் திரு.நவநீத கிருஷ்ணனுக்கு 13.10.2025 பகல்பணி என்றும், காலை 08.00 மணி முதல் மாலை 17.30 மணி வரை எனவும் திரு.காசி, திரு.முத்துகிருஷ்ணன் மற்றும் திரு.தினேஷ் ஆகியோர் தெரிவித்தனர். அவர்களிடமிருந்து திரு.அரிச்சந்திரன், திரு.நவநீத கிருஷ்ணன் மற்றும் திரு.வினோத் ஆகியோர்களது விடுப்பு விண்ணப்ப கோப்புகள் முறையே 30, 38 மற்றும் 34 பக்கங்களுடையது 3 கோப்புகள் கைப்பற்றப்பட்டது. இதுதொடர்பாக திடீர் இணை ஆய்வு செயல்முறைகள் ஒன்று 13.10.2025 அன்று இரவு 18.30 மணி முதல் இரவு 23.00 மணிக்குள் தயார் செய்யப்பட்டது. பின்னர் திரு.அரிச்சந்திரன், திரு.நவநீத கிருஷ்ணன் மற்றும் திரு.வினோத் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலங்களை பதிவு செய்தேன். மேற்படி திரு.அரிச்சந்திரன், திரு.நவநீத கிருஷ்ணன் மற்றும் திரு.வினோத் ஆகியோர்களால் முறையாக கணக்கு காட்ட முடியாத பணம் ரூ.59,500/- மற்றும் விருதுநகர் கனரா வங்கி கிளையிலுள்ள திரு.வினோத் சேமிப்பு (கணக்கு எண்.62762259492) கணக்கில் செலான் மூலம் டெபாசிட் செய்த பணம் ரூ.3,79,000/- ஆகியவை விருதுநகர் தீயணைப்பு மற்றும் மீட்புபணிகள் அலுவலகத்திற்குட்பட்ட பகுதிகளிலுள்ள பட்டாசு கடைகள், பட்டாசு தயார் செய்யும் கம்பெனிகள் மற்றும் பெரிய தொழிற்சாலைகளுக்கு TN 93 1118 Pulsar மற்றும் TN 07 CB 2090 Pulsar ஆகிய இருசக்கர வாகனங்களில் சென்று சம்மந்தப்பட்ட உரிமையாளர்களை சந்தித்து, வருகிற தீபாவளி திருநாளை (20.10.2025) முன்னிட்டு தனியாக நோட்புக் போட்டு குறிப்பு எழுதி கொண்டு (யார் யார் எவ்வளவு பணம் என்பதை) மாமூல் பணமாக வசூல் செய்யப்பட்ட பணமாக இருக்கலாம் என்றும், அவர்களால் கணக்கு காட்ட முடியாத பணம் என்றும் தெரிய வந்ததால் விருதுநகர் தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையத்தில் பணிபுரியும் தீயணைப்பாளர் திரு.அரிச்சந்திரன், தீயணைப்போர் ஓட்டுநர் திரு.நவநீத கிருஷ்ணன் மற்றும் தீயணைப்பாளர் திரு.வினோத் ஆகியோர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் திடீர்

இணை ஆய்வு செயல்முறைகள் நாள் 13.10.2025, மேற்படி தீயணைப்பாளர் திரு.அரிச்சந்திரன், தீயணைப்போர் ஓட்டுநர் திரு.நவநீத கிருஷ்ணன் மற்றும் தீயணைப்பாளர் திரு.வினோத் ஆகியோர்களின் வாக்குமூலங்கள், மாமூலாக வசூல் செய்த லஞ்ச பணத்தில் ரூ.3,79,000/- பணம் வங்கியில் டெபாசிட் செய்ததற்குரிய செலான், மேற்படி பணம் மற்றும் செலான் இருந்த THANGAMAYIL DIGI GOLD என்று அச்சிடப்பட்டு அடையாளமுள்ள மஞ்சள்நிற பை, திரு.நவநீத கிருஷ்ணனும், திரு.வினோத்தும் கைப்பட குறிப்பு எழுதி வைத்துள்ள Classmate என்று அச்சிடப்பட்டு அடையாளமுள்ள நோட், Schoolmate என்று அச்சிடப்பட்டு அடையாளமுள்ள மற்றொரு நோட் மற்றும் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.59,500/- ஆகியவற்றையும் சமர்ப்பிக்கிறேன். (Sd) எம்.முத்துமாரி 14.10.2025 (எம்.முத்துமாரி), மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், விருதுநகர் மாவட்டம். தனி வட்டாட்சியர் (சிப்காட்), அகத்தாகுளம் - அலகு-4, (இ) அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம். Sir, Received the complaint on 14.10.2025 at 09.30 hrs and registered a case in Virudhunagar, V&AC, Cr.No.8/2025 U/s 7 of PC Act1988 as Amended in 2018 on 14.10.2025 at 10.30 hrs. (sd) K.Ramachandran 14.10.2025, Additional Superintendent of Police V&AC, VNR (OD).

The Original FIR, complaint, Surprise check proceedings and statement of accused 1 to 3 are submitted to the Hon'ble Principal District and Sessions Judge Cum Special Judge for PC Act Cases, Virudhunagar District @ Srivilliputhur and copies submitted to the concerned officers.

14.10.25
(K.RAMACHANDRAN)
ADSP/V&AC/VNR (OD).